வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 27.05.2024 திங்கட்கிழமை | இதழ் : 148 | பக்கங்கள் : 12

# சிங்கள தலைவர்களின் இன மேலாதிக்க மனோநிலைக்கு ரணிலும் விலக்கல்லர்!

## இப்படி சாடுகிறார் சிறீதரன் எம். பி.



கிளிநொச்சி, மே 27

**ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை அதிகாரபூர்வமாக வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்களுக்கு பலமுறை வழங்கியிருந்தனர். ஆனால், அவற்றை அவர்கள் சரிவரப் பயன்படுத்தாமைக்கு இனமேலாதிக்க மனோநிலையே காரணம். இதற்கு ரணிலும் விதி விலக்கல்லர்.**

- இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை தமிழ் கட்சிகள் நிறுத்துவது சாத்தியமில்லை என்று விக்னேஸ்வரன் எம். பியிடம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், நேற்று கிளிநொச்சி - கௌதாரிமுனையில் நடத்திய மக்கள் சந்திப்பில் சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் தயாரில்லை. சிங்களத் தலைவர்கள் ஈழத் தமி ழர்களை எடுப் பார் கைப் பிள்ளைகளாக பயன்படுத்த

11



## பிரான்ஸ் தூதர் திடீர் மரணம்!

கொழும்பு, மே 27

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிராங்கோயிஸ் பக்டெட் (Jean Francois Pactet) - வயது - 53 அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சடலமாக மீட்கப் பட்டார்.

கொழும்பு

11

வவுனியா பல்கலையில் மருத்துவ பீடம்

## வவுனியா மருத்துவமனை போதனாவாக மாற்றப்படும்



வவுனியா, மே 27

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை போதனா மருத்துவமனையாக மாற்றப்படும். வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கப் படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று மாங்குளம் ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலைய திறப்பு விழாவில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மேல் மாகாணத்தை போன்று உயர் தர சுகாதார சேவைகளை கொண்ட மாகாணமாக

11

## நீங்களே பிரச்னைகளை தீர்ப்பீர்கள் முல்லைத்தீவு மக்கள் நம்புகின்றனர்

ரணிலை புகழ்ந்தார் செல்வம் எம். பி.

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு மக்களின் பிரச்னைகளை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் தெரிவித்தார் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக வடக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் நேற்று புதுக்குடியிருப்பு மகா

11

## ஒக்ரோபர் 17 இல் ஜனாதிபதி தேர்தல்!

அமைச்சர் விஜதாஸ

ஹற்றன், மே 27

எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுவரெலியா - ஹற்றனில் நடைபெற்ற நிகழ்வு ஒன் றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

11



## வவுனியா, மன்னாரில் 700 பேருக்கு காணி உறுதி

வவுனியா, மே 27

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 700 காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரியவர்களிடம் வழங்கி வைத்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா சென்ற ஜனாதிபதி அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வைத்து இந்தக் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகங்கள், மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக இந்த காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் 5,400 முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அடிப்பதா, ஆட்டமிழப்பதா? தீர்மானம் ரணில் வசமே!

பஸில் ராஜபக்ஷ சொன்னாராம்

கொழும்பு, மே 27

"தற்போதைய அரசியல் சூழ்நிலையில் எவ்வாறு அடித்தாட வேண்டும் என்று ரணிலிடம் தெரிவித்து விட்டேன். அடித்தாடுவதா? தவறான முடிவெடுத்து ஆட்டமிழப்பதா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும்."

இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ தன்னை சந்தித்த கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 15 ஆம் திகதிக்கு பிறகு பாராளுமன்றம்

11

## மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை பக்கச்சார்பானது!

ஜெனிவாவுக்கான வதிவிட பிரதிநிதி

கொழும்பு, மே 27

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பணிமனை இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கை குறைபாடுடையது - பக்கச்சார்பானது - சுயமாக உருவாக்கியது என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹிமாலி அருணதிலக சாடியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோக்கெர் டேர்க்கின் அறிக்கை தொடர்பில் அவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணை எதுவும் இல்லாத நிலையில் ஆணையாளர் இலங்கை குறித்து அறிக்கை

11

ஐ. பி. எல். ரி-20 தொடர்:

## சம்பியன் வென்றது கொல்கத்தா அணி!



சென்னை, மே 27

17ஆவது ஐ. பி. எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாதை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

சென்னை - சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 113 ஓட்டங்கள் எடுத்தது.

114 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை கொல்கத்தா அணி விரட்டியது. ரஹ்மானுல்லா குர்பாஸ் மற்றும் சுனில் நரைன் இணைந்து

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஓர் ஊரில் கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்.

அவர் மிகுந்த சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தபோது பாதியில் ஒவ்வொருவராக எழுந்து போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்து வாரியார் சொன்னார், "இராமாயணத்தில் அனுமனை சொல்லின் செல்வர் என்று குறிப்பிடுவார்கள். இந்த ஊரிலும் சொல்லின் செல்வர்கள் பலர் இருப்பதைப் பார்க்கிறேன்" என்றார்.

மண்டபத்திலிருந்து போய்க் கொண்டிருந்தவர்கள் யாரை சொல்லப் போகிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலுடன் நின்றனர்.

வாரியார் தொடர்ந்தார், "நான் நல்ல பல விஷயங்களை சொல்லின் அதைக் கேட்காமல் செல்பவரைத்தான் சொல்கிறேன்".

தமிழில் இப்படி பல விசயங்களை சொல்லலாம். இது தமிழ் மொழிக்கு இருக்கும் சிறப்புகளில் ஒன்று.

நேற்றைய தினம் 'ஈழநாடு' வில் வெளிவந்திருந்த அந்தத் தலைப்புச் செய்தியை திரும்பத்திரும்பப் படிக்கவேண்டியிருந்தது.

அதற்கு காரணம் ரணில் அதனை எந்த அர்த்தத்தில் சொல்லியிருப்பார் என்று ஒன்றுக்கு பல தடவைகள் படிக்க வேண்டிருந்தது. யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரனை அவரின் இல்லம் சென்று சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்பில் அவர் தன்னிடம் கூறினாரென சில விடயங்களை விக்னேஸ்வரன் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அவர் கூறாதவற்றை விக்னேஸ்வரன் கூறியிருப்பார் என்று நம்புவதற்கு இடமிருக்காது. அது மட்டுமன்றி, அவர் கூறிய செய்திகள் இதுவரை ஜனாதிபதி தரப்பில் இருந்து மறுக்கப்படவுமில்லை.

"தமிழ்க் கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அவர்களால் ஒற்றுமையாக பொது வேட்பாளரை நிறுத்தமுடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். இது எமக்கு - தமிழ்க்கட்சிகளுக்கு வெட்கட்கேடான விடயம்."

மேற்கண்டவாறே விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். நாம் அறிந்த வரையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மாத்திரமே முதலில் இந்த விடயத்தில் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தது. அதுவும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒரு வேடபாளர் போட்டியிடுவதெனில் அதனை ஆதரிப்பது என்பதே அந்த முடிவு என்று அண்மையில், புளொட் அமைப்பின் தலைவர் ஒரு சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

அதாவது, அனைத்து கட்சிகளும் ஒன்றாக முடிவெடுத்தால் மாத்திரமே அதற்கு ஆதரவு வழங்குவது என்றே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முடிவெடுத்திருந்தது. அதன் பின்னர் விக்னேஸ்வரனின் கட்சியும் ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியும் மாத்திரமே பகிரங்கமாக அந்த விடயத்தில் ஆதரவை கட்சி ரீதியாக வெளியிட்டனவே தவிர, வேறு எந்தக் கட்சியும் தமது கட்சியின் முடிவாக இதுவரை பொதுவேட்பாளர் விடயத்தில் தமது ஆதரவை பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை.

இந்த விடயத்தில் சில சிவில் அமைப்புகள் மாத்திரமே தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன. ஆனால், தமிழ் கட்சிகள் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்றும் அவர்களால் ஒற்றுமையாக முடிவெடுக்க முடியாது என்றும் ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார் என்றால், அவருக்கு அந்த நம்பிக்கை எங்கிருந்து வந்தது என்பது குறித்து ஆராய்ச்சி எதுவும் தேவையில்லைத்தான். தமிழ் கட்சிகளின் தலைவர்களை மாத்திரமல்ல, ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளையும் தனித்தனியாக நன்றாகவே அறிந்து வைத்திருப்பவர் அவர்.

அண்மையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்த போது சம்பூரில் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குற்றப் பத்திரத்தில், சுகாதார முறைகளை பின்பற்றாது கஞ்சி காய்ச்சியதாகவும் ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. அதனைப் படித்துவிட்டு நமது மூத்த ஊடக நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு, "விரைவில் வரவிருக்கும் வெசாக் பண்டிகையின்போது நாடு முழுவதும் உணவுகள் பரிமாறப்படுகின்ற போதும் பொலிஸார் எல்லா இடங்களிலும் சுகாதார முறைகள் பற்றி ஆய்வு நடத்தி யாரையாவது கைதுசெய்வார்களா? இது என்ன கொடுமை. ரணில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க வருவாரா?" என்று தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.

நியாயமான கோபம்தான்.

ஆனால் ஜனாதிபதி ரணில், விக்னேஸ்வரனை சந்தித்தபோது தெரிவித்த மற்றுமொரு விடயம் "வடக்கு - கிழக்கில் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுதான் இப்போது முக்கியம். அரசியல் தீர்வு இப்போது அவசரமில்லை." என்று தெரிவித்திருப்பது.

இதனை அவர் தெரிவிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர்தான் கிளிநொச்சியில், "யாழ். போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படும் என ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளார். எவ்வாறாயினும், நாங்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் ஆர்வமாக உள்ளோம்." என்று யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

நமது மக்கள் பிரதிநிதிகள் விடுக்கின்ற கோரிக்கையை அவர் கண்டுகொள்வதற்கு இப்போதும் தயாராக இல்லை என்பதையே நமது மண்ணுக்கு வந்து கூறிச் சென்றிருக்கிறார் ஜனாதிபதி. இப்படிக் கூறுவதற்கும் ஒரு 'தில்' வேண்டும். அது நமது ஜனாதிபதியிடம் நிறையவே இருக்கின்றது.

**ஊர்க்குருவி.**

## வரி ஏய்ப்பாளரை அடையாளப்படுத்தவே பிரஜைகளின் சொத்து விபரம் சேகரிப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

கொழும்பு, மே 27

இலங்கை பிரஜைகளின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விபரங்கள் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் விடுத்துள்ள போதிலும், அது புதிய சட்டங்களை திணிக்கும் ஒரு வர்த்தமானி அல்ல. இது வருமான வரி சட்டத்தின் 128(8) அத்தியாயத்துக்கு அமைய மூன்றாம் தரப்பினரின் மூலம் இறைவரித் திணைக்களத்துக்கு தகவல் பெறுவதற்கான உரிமை நடைமுறைப்படுத்தல் மட்டுமே என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய வலியுறுத்தினார்.

அத்துடன், கடந்த காலத்தை பாதிக்கும் வகையில் இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்பட மாட்டாது.

செயலற்ற நிலையில் இருந்த சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவதே இந்த சுற்றறிக்கை. இதன்படி கடந்த மார்ச் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கான அறிவிப்பு மே 21 ஆம் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் வெளியிடப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(ஐ)

## ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதி உறுதியான முடிவை அறிவிப்பார்

### அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ

கொழும்பு, மே 27

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு மாதத்துக்குள் உறுதியான தீர்மானத்தை அறிவிப்பார். அவர் நிச்சயம் போட்டியிடுவார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் 10 அல்லது 15 உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள் என சுற்றுலாத்துறை மற்றும் காணி விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமாஸவுக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் பகிரங்க விவாதம் இடம்பெறும் போது அன்றைய தினம் விடுமுறை வழங்க வேண்டும். இருவரின் விவாதத்தை நாட்டு மக்கள் பொறுமையாக அமர்ந்து பார்க்க வேண்டும். விவாதத்தை பார்த்ததன் பின்னர் நாட்டு மக்கள் எவரும் இருவருக்கும் வாக்களிக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார். இன்னும் ஒருமாத காலத்துக்குள் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை அறிவிப்பார். தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சியின் 10 அல்லது 15 உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிடலாம். நான் குறிப்பிடுவது நடைப் பெறாவிடின் என்னைக் கேலி செய்யலாம்.

பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை பலவீனப் படுத்தவே எதிர்க்கட்சித் தலைவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஐக்கிய மக்கள் சக்திக்குள் இணைக்கிறார். கட்சியை நிறுவுவதற்கு சரத் பொன்சேகா அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளால் ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக இல்லாதொழியும் - என்றார்.

(ஐ)

## துப்பாக்கி மீட்பு

கொழும்பு, மே 27

குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரின் கைத்துப்பாக்கி மற்றும் வெற்று தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

களுத்துறை - மத்துகம - நவுந்துடுவ பகுதியில் உள்ள ஏரிக்கு அருகில் உள்ள மரத்தடியில் புதைக்கப்பட்ட நிலையில் இவை கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச் செயல்களை தடுப்பதற்காக விசேட அதிரடி பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜனாதிபதி வவுனியா வருகை கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு

கொழும்பு, மே 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வவுனியா வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கறுப்பு கொடி காட்டினர். எனினும், முற்கூட்டியே தகவல் அறிந்து அங்கு குவிந்த பொலிஸார் அவர்களை அங்கு கூடுவதற்கு விடாது தடுத்தனர். மீறி கூடியவர்களையும் மிரட்டினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா மருத்துவமனை, மாவட்ட செயலகம் என்பவற்றுக்கு நேற்று பிற்பகல் சென்றார். அப்போது, மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை சேர்ந்த தாய்மார் சிலர் ஜனாதிபதியின் வருகைக்கு கறுப்பு கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

## தேசிய மக்கள் சக்தியினர் மன்னாரில் மக்கள் சந்திப்பு

மன்னார், மே 27

தேசிய மக்கள் சக்தியினர் மன்னார் மாவட்டத்தில் மக்கள் சந்திப்பை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடத்தினர்.

தேசிய மக்கள் சக்தி (ஜே. வி.பி) கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க கலந்து கொண்டார்.

இந்த மக்கள் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மன்னார் மாவட்ட மக்கள் அநுரகுமாரவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியே இந்த மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.05.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், வைகாசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எந்த அடிப்படையில் வாக்களிப்பது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு வருகையின்போது அவர் பங்குபற்றிய நிகழ்வுகளில் பாரபட்சமில்லாமல் இலங்கை தமிழ் அரசு கட்சியும் பங்குபற்றியிருக்கின்றது. இதேபோன்று, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் பங்குபற்றியிருக்கின்றது. பங்குபற்றிய தமிழ் அரசியல்வாதிகள் ரணிலுக்கு நெருக்கமாக நிற்பதும் - அதன்போதான அவர்களின் உடல்மொழியும் அவர்களின் மனோநிலையை காண்பிக்கின்றன.

இதனை விடவும் முக்கியமானது ரணில் - விக்னேஸ்வரன் சந்திப்பு. ரணில் வீடு தேடிச் சென்று, ஒரு செய்தியை சொல்லிச் சென்றிருக்கின்றார். இதனையும் விக்னேஸ்வரன்தான் வெளிப்படுத்தியிருக்கின்றார் - அதாவது, அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை - அவர்களால் அது முடியாது. அத்துடன், ரணில் தெரிவித்திருக்கும் இன்னொரு தகவல்தான் தமிழர் தரப்புகள் ஊன்றிக் கவனிக்க வேண்டியது. அதாவது, “இப்போது அரசியல் தீர்வு அவசரமானதல்ல - அதனை விடவும் மக்களின் பொருளாதார பிரச்னை முக்கியமானது. மேலும், நானும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில்தான் பேசுகின்றேன் - சஜித் பிரேமதாஸவும் அப்படித்தான் பேசுகின்றார்.”

இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க எதனை உணர்த்த முற்படுகின்றார்? தமிழர்கள் விரும்புவது போன்றதோர் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் பேசப் போவதில்லை - நானும் பேசப்போவதில்லை என்பதைத்தானே அவர் கூறிச் சென்றிருக்கின்றார். இந்தத் தகவலை கூறும்போதே, தமிழ் கட்சிகளால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாதென்றும் கூறியிருக்கின்றார் என்றால் - ஒன்றில், ரணில் தன்னை விட்டால் உங்களுக்கு வேறு தெரிவில்லை என்கிறாரா அல்லது தங்களை தவிர்த்து மாற்று திட்டமொன்றை முன்னெடுக்கக்கூடிய வல்லமையுடன் தமிழ் கட்சிகள் இல்லையென்று கூறுகின்றாரா? அவரால் இந்தளவு உறுதியாக எவ்வாறு கூறமுடிகின்றது? ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி எவ்வாறு தமிழ் கட்சிகளின் இயலுமை பற்றி இந்தளவு உறுதியாகப் பேச முடிகின்றது? இதற்கு யார் காரணம்?

பதினைந்தாவது முள்ளிவாய்க்கால் நினைவுகூரலுக்கு பின்னர்கூட ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்னும் எண்ணம் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மத்தியில் வரவில்லை. அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்கான பாராளுமன்ற கதிரைகளை எண்ணுகின்றனவே தவிர, தமிழர் அரசியலை எவ்வாறு பலம்வாய்ந்த நிலையில் முன்னெடுக்க முடியுமென்று எண்ணவில்லை. இதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவால் தமிழ் கட்சிகள் பற்றி இவ்வாறு பேச முடிகின்றது. ஒருவேளை ரணில் எவர்மீது நம்பிக்கை வைக்காதுவிட்டாலும்கூட, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கக்கூடும். ஏனெனில், கடந்த பதினைந்து வருடங்களாக எந்தவோர் இணக்க முயற்சிக்கும் காங்கிரஸ் ஒத்துவரவில்லை. இப்போதும்கூட, தமிழ் சிவில் சமூக அமைப்புகளிடம் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை பொதுவெளிகளில் எதிர்ப்பதில்லை என்று உறுதிமொழி வழங்கிவிட்டு அதற்கு மாறாக பொதுவெளிகளில் எதிர்த்தும் - விமர்சித்தும் வருகின்றனர்.

அரசியல் தீர்வு பற்றி பேச வேண்டியதில்லை என்றால் ஜனாதிபதித் தேர்தலின் போது, எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பது? தமிழ் மக்களை எந்த அடிப்படையில் வாக்களிக்குமாறு தமிழ் கட்சிகள் கோரப் போகின்றன? அரசாங்கத்துடன் இருக்கின்ற கட்சிகள் அதனை கோர முடியும். ஏனெனில், அவர்கள் அரசியல் தீர்வு தொடர்பில் பேசவில்லை - ரணில் என்ன கூறுகின்றாரோ அதுதான் அவர்களுக்கான தாரக மந்திரமாகும். ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகள் அவ்வாறு செயல்பட முடியுமா? அவ்வாறு செயல்பட்டால் உங்களுக்கும் அரச ஆதரவு கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்போர் - விமர்சிப்போர் இப்போது கூறுங்கள், எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பது? பகிஷ்கரிப்புப் பற்றி பேசுவதில் பயனில்லை. அதுவும் தமிழ் மக்களை ஒரு தமிழ் பொது வேட்பாளரை நோக்கி திரட்ட முடியுமா - தாங்கள் கூறுவதை மக்கள் செவிமடுப்பார்களா என்னும் சந்தேகத்திலிருந்து எழும் ஒன்றுதான். ஜனநாயக கட்சி ஒன்றின் பகிஷ்கரிப்பு கோரிக்கையானது அடிப்படையில் ஓர் அரசியல் இயலாமையாகும்.

# 7 இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

*கொழும்பு, மே 27*

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் ஏழு இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளின்படி, 2022 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில், குறைந்தபட்சம் 6 இலட்சத்து 83 ஆயிரத்து 118 இலங்கையர்கள் சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனையில் காவலர்களுடன் மோதியோர் கைது!

*யாழ்ப்பாணம், மே 27*

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மதுபோதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று முன்தினம் மருத்துவமனையில் நோயாளிகளை பார்வையிடும் நேரம் நிறைவடைந்த பின்னர் தம்மை உள்நுழைய அனுமதிக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் கோரியுள்ளனர்.

எனினும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்தமையால் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, மருத்துவமனை நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்த நிலையில் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

# விழிப்புலனற்ற பட்டதாரிகளுக்கு அரசு வேலை வாய்ப்பு தரவேண்டும்

## விழிப்புலனற்ற பட்டதாரி கோரிக்கை

*யாழ்ப்பாணம், மே 27*

விழிப்புலனற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு விசேட செயல்திட்டம் ஊடாக விரைவாக அரச வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று விழிப்புலனற்ற பட்டதாரியான விஜயகுமார் விஜயலாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நான் எனது பட்டப்படிப்பை முடித்து சுமார் நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. எனக்கு வேலை வாய்ப்பு இன்னமும் கிடைக்கவில்லை.

படிக்கும் காலத்தில் நாம் மற்றுமொருவரின் உதவியுடன் பல தடைகளை தாண்டி கற்று, பட்டதாரி ஆனேன். இன்றும் நான் மற்றவர்களின் உதவியுடன் - ஒரு தங்கி வாழ்பவனாக வாழ்கிறேன். நான் மாத்திரமின்றி என்னை போல விழிப்புலனற்ற மற்றும் விசேட தேவையுடைய பட்டதாரிகள் பலரும் வேலை வாய்ப்புகள் இன்றி உள்ளனர்.


நாம் சுயதொழில் செய்யும் நோக்குடன் வங்கிகளில் கடன் பெற முனைந்த போது, நிரந்தர வேலையற்ற எமக்கு கடன் தர முடியாது என வங்கிகள் மறுத்துவிட்டன. தனியார் துறைகளுக்கு சென்றால் நீங்கள் பட்டதாரிகள் உங்களுக்கு அரசாங்கம் வேலை தர நீங்கள் இந்த வேலையிலிருந்து விலகி அரச வேலைக்குச் சென்று விடுவீர்கள் என கூறி அவர்களும் வேலை தர மறுக்கின்றார்கள்.

எங்களால் அரச திணைக்களங்களில் வேலை செய்ய முடியும். குறிப்பாக தொலைத்தொடர்பு இயக்குநர்களாக, கணினி வேலை செய்பவர்களாக தரவு சேமிப்பாளர்களாக எம்மால் பணியாற்ற முடியும்.

கணினி திரையில் என்ன இருக்கிறது என்பதனை எம்மால் பார்க்க முடியாதே தவிர, எம்மால் கடிதங்கள் தட்டச்சு செய்வதற்கு, மின்னஞ்சல்கள் அனுப்புவதற்கு, தரவுகளை சேமிப்பதற்கு என கணினியில் பல வேலைகளை செய்ய முடியும். விழிப்புலனற்றவர்களுக்காக தொழில்நுட்ப வசதிகள் பல வந்துள்ளன. எனவே எம்மால் திணைக்களங்களின் பணியாற்ற முடியும்.

எமக்கான வாய்ப்புகளை தாருங்கள். நாம் தொடர்ந்தும் தங்கி வாழ்பவர்களாக வாழ விரும்பவில்லை. எமக்கு அரச வேலை வாய்ப்பு கிடைத்தால் நாம் எமது ஊதியத்தில் வாழ முடியும் - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லை என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். அக்கம் - பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். திடீர் பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். விலை உயர்ந்தப்பொருட்களை வாங்குவீர்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும்.

**மகரம்**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றி பயம் வந்து நீங்கும். உறவினர் நண்பர்களால் சங்கடங்கள் வரும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தன்னம்பிக்கை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். இனிமையான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உங்கள் கை ஓங்கும். நாள்.

# கேரள அரசாங்கத்தை கண்டித்து 13இல் விவசாயிகள் போராட்டம்!

கோவை, மே 27

கேரள அரசாங்கத்தை கண்டித்து எதிர்வரும் 13ஆம் திகதி சின்னாறு சோதனைச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என்று விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு ஆலோசனைக் கூட்டம் கோவையில் நேற்று முன்தினம் நடந்தது. இதன் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்ட கடந்த பிப்ரவரி மாதம் காவிரி மேலாண்மை ஆணையத்தில் தமிழக அரசின் ஒப்புதலோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் கூறியுள்ளார். அதற்கு தமிழக முதல்வர் இதுவரை பதில் தெரிவிக்க வில்லை.

அதுபோன்று முல்லைப் பெரியாறு அணையை இடித்து விட்டு அங்கு புதிய அணையை கட்ட கேரள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதை தி. மு. க. அரசு தடுத்து நிறுத்தவில்லை. இது தொடர்பாக முதல்வர் மௌனம் சாதித்து வருகிறார்.

எனவே, தமிழக நீராதாரங்களை பாதிக்கும் வகையில் செயல்படும் கேரள அரசை கண்டித்து வருகிற 13ஆம் தேதி திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே மூணாறு செல்லும் சாலையில் உள்ள சின்னாறு சோதனை சாவடியில் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேநேரம், நாளை மதுரை வருமான வரித்துறை பணிமனையை சுற்றிவளைத்து போராட்டம் நடத்துவோம் - என்றார். (ஐ)

# ஒடிசா வளங்களை சூறையாடும் தமிழக அரசியல் கொள்ளை குழு

### அமைச்சர் ஸ்மிருதி இராணி சர்ச்சை கருத்து

ஒடிசா, மே 27

ஒடிசா வளங்களைக் கொள்ளையடிக்க தமிழகத்திலுள்ள அரசியல்வாதிகள் இடைவிடாது வேலை செய்து வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி குற்றஞ்சாட்டியுள்ளார்.



ஒடிசாவின் குஜங் பகுதியில் நடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

ஒடிசாவில் ஆட்சியிலுள்ள பிஜூ ஜனதா தன அரசு நிலம், நிலக்கரி, மணல் மற்றும் சுரங்க கொள்ளைக் கும்பல்லை வளர்த்தது. இந்த மாநிலத்தின் வளங்களை கொள்ளையடிக்க சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்தவாறு இடைவிடாது வேலை செய்கின்றனர் - என்றார். (எ)

# "காரைக்கால் மீனவர்களை அடிக்கடி கைது செய்யும் இலங்கை கடற்படை"

புதுச்சேரி, மே 27

இலங்கைக் கடற்படையினரால் காரைக்கால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படும் நிலையில் இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியக் கடற்படையின் கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி, துணை அட்மிரல் ராஜேஷ் பெண்டாரகரிடம் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை, இந்தியக் கடற்படையின் கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி சனிக்கிழமை சட்டப் பேரவையிலுள்ள முதல்வர் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இதன்போதே முதல்வர் ரங்கசாமி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

"காரைக்கால் மாவட்ட மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருகிறது. இதற்கு நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடற்படையின் செயல்பாடுகள் மற்றும் முக்கியத்துவம் குறித்த கல்வியை, விழிப்புணர்வை புதுச்சேரியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடற்படையினர் மூலம் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்"- என்றார். (எ)

# போராட்டத்தை தடுக்க திட்டம்!

கூடலூர், மே 27

தமிழக - கேரள எல்லையில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையை இடித்து புதிய அணை கட்ட கேரள அரசு முயன்று வருகின்றது. இதற்கு தமிழக அரசு மற்றும் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தவுள்ளனர்.

நாளைய தினமும் எதிர்வரும் 13ஆம் திகதியும் கேரள அரசை கண்டித்து போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில், இந்தப் போராட்டங்களை தடுக்கத் தமிழ்நாடு அரசு முயல்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதேசமயம், போராட்டத்தைத் தடுத்தால் மாபெரும் போராட்டம் வெடிக்கும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே பேரணிக்கு திட்டமிட்டுள்ள லோயர் கேம்ப் பென்னிகுவிக் மணிமண்டபத்தில் பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. (ஐ)

# 400 தொகுதிகளை கைப்பற்றி பா. ஜ. க. சாதனை படைக்கும்

### மத்திய அமைச்சர் எல். முருகன்

திருச்சி, மே 27

பாராளுமன்றத் தேர்தலில் இதுவரை நடந்து முடிந்த தொகுதிகளில் 310 தொகுதிகளில் பா. ஜ. க. வெற்றி பெறுவதற்கான சாதகமான நிலையுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த கட்டங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களிலும் சேர்த்து மொத்தம் 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று ஒரு வரலாற்றுச் சாதனையை பாரதிய ஜனதா படைக்கும்- இவ்வாறு மத்திய அமைச்சர் எல். முருகன் தெரிவித்தார்.

முன்னதாக மத்திய மந்திரி எல்.முருகன் சிறீ ரங்கம் ரங்கநாதர் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



தமிழ்நாட்டில் மிகப் பெரியதொரு திருப்பம் நடைபெறவுள்ளது.இதுவரை யாரும் எதிர்பாராத அரசியல் புரட்சி இந்தத் தேர்தலில் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 4ஆம் திகதி உங்களுக்கே தெரியும். தமிழ்நாட்டில் ஒரு மிகப்பெரிய வெற்றியை தேசிய ஜனநாயக கூட்டணிக்கு நாங்கள் சமர்ப்பிப்போம் - என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பழைய யாழ். ஆசிரியர் பாரம்பரியத்தை மீட்டெடுக்க நான் செயலாற்றுகின்றேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



யாழ்ப்பாணம், மே 27

**கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட "யாழ்ப்பாண ஆசிரியர் பாரம்பரியம்" நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு சிறந்த முன்னுதாரணம். அந்தக் கல்வி முறையை மீளமைக்க தாம் செயல்பட்டு வருகிறார் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

அத்துடன், ஆசிரியர்கள் முன்மாதிரியானவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் கோசங்கள் எழுப்பிக்கொண்டு வீதியில் ஆர்ப்பாட்டம் செய்பவர்களாக இருந்தால் மாணவர்களால் நிராகரிக்கப்படுவார்கள். தொழில் கௌரவத்தைப் பேணுவது அனைத்து ஆசிரியர்களினதும் பொறுப்பு என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஆசிரியர் நியமன நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், முன்பு யாழ். ஆசிரியர்களின் சேவை நடாளாவிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் மிக கௌரவத்துடன் பார்க்கப்பட்டது. அந்தப் பொறுப்பை அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் நிறைவேற்றினார்கள்.

நான் படித்த கொழும்பு றோயல் கல்லூரியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். அவர்களின் விசேடமான அர்ப்பணிப்பின் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் பிரபல ஆசிரியர்கள் குறித்து இன்றும் சமூகத்தில் பேசப்படுகிறது. அந்த ஆசிரியர் பாரம்பரியமானது நாட்டின் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேவை குறித்து சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது என்றே கூற வேண்டும்.

கல்வி உயர் மட்டத்தில் பேணப்பட்டதால்தான் யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகள் உலகம் முழுவதும் பெரும் புகழைப் பெற்றிருந்தன. ஹாட்லி கல்லூரி மாணவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். எனவே, நீங்களும் அந்த கௌரவமான தொழிலில் இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பணியில் நீங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். வீதியில் கோஷம் போட்டால் மாணவர்கள் உங்களை ஏற்க மாட்டார்கள். எனவே, உங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும். யாழ்ப்பாணத்தின் கல்வி முறை மீண்டும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# மாணவியர் துஷ்பிரயோகம் ஆசிரியர் ஒருவர் மறியலில்

யாழ்ப்பாணம், மே 27

மானிப்பாயில் பாடசாலை ஒன்றில் மாணவியரை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 42 வயதான ஆசிரியரே கைது செய்யப்பட்டார்.

விசேட வகுப்பை நடத்துவதாகக் கூறியே கைதான ஆசிரியர் மாணவிகளுடன் அத்துமீறியுள்ளார். இது தொடர்பில் மாணவி ஒருவர் தனது பெற்றோருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பொலிஸாரின் விசாரணையில் மேலும் சில மாணவிகளிடம் ஆசிரியர் அத்துமீறியிருப்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# கடையில் வாங்கிய றோலுக்குள் கறள்பிடித்த கம்பித் துண்டு!

யாழ்ப்பாணம், மே 27

கடை ஒன்றில் வாங்கப்பட்ட றோல் ஒன்றில் சுமார் 4 அங்குலமுள்ள கறள் பிடித்த கம்பித்துண்டு ஒன்று காணப்பட்டதாக மருதனார்மடம் பகுதி சுகாதார பொலிஸ் பரிசோதகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



மருதனாரமடத்திலுள்ள கடை ஒன்றில் ஒருவர் 10 றோல் களை வாங்கிச் சென்றுள்ளார். வீட்டில் அவற்றை பகிர்ந்து சாப்பிட்ட போதே றோல் ஒன்றில் கறள்பிடித்த கம்பி வெளிப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அந்தப் பகுதியின் சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

சுகாதார பரிசோதகரின் விசாரணையில், குறித்த றோல் சுன்னாகத்திலுள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் தயாரிக்கப்பட்டதாக தெரிய வந்தது.

அத்துடன், அந்த வெதுப்பகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (ஐ)



# கடற்றொழிலாளர் பிரச்னை; யாழில் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், அரசாங்கம் கொண்டுவரவுள்ள மீன்பிடி சட்டதிருத்த வரைவு சம்பந்தமாக வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் கருத்துகளை கேட்டறியும் முகமாக கலந்துரையாடல் யாழில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன் போது 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

வடக்கின் 4 மீன்பிடி மாவட்டங்களை சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரச்னைகளை முன்வைத்தனர். அத்துடன், தமது பிரச்னைகள் தொடர்பில் தொடர்ச்சியாக பாராளுமன்றில் பேச வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், செ. கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தம் சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தனர்.

# தமிழர் பிரச்னையை சகலருக்கும் உணர்த்தவே பொது வேட்பாளர்!

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி

கிளிநொச்சி, மே 27

சிங்கள தலைவர்களும் வெளிநாடுகளும் தமிழ் மக்களின் பிரச்னைகளை விளங்கிக் கொள்வதற்காகவே பொது வேட்பாளரை நிறுத்தவுள்ளோம் - என்று கூறியுள்ளது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான நிர்வாக தெரிவு கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட நிர்வாக தெரிவின் பின்னர் அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் கருத்து வெளியிடுகையில்,

தமிழ் மக்களின் உரிமையை பெற பலம்மிக்க கட்சியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உள்ளது. கட்சியை மேலும் பலப்படுத்துவற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

அடுத்து தேர்தல்கள் நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் உரிமையை பெற்றுக்கொள்ள தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதாக கொள்கை அளவில் தீர்மானம் எடுத்திருக்கின்றோம். சிவில் சமூக அமைப்புகளும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர்.

யுத்தம் முடிந்து பல பிரச்னைகளை எதிர்நோக்கி வருகிறோம். வருகின்ற ஜனாதிபதிகளும் பாராமுகமாக இருக்கின்றனர். சிங்கள தலைவர்களும் வெளிநாடுகளும் தமிழ் மக்களின் பிரச்னைகளை விளங்கிக் கொள்வதற்காக பொது வேட்பாளரை நிறுத்தவுள்ளோம் - என்றார்.

ஜனாதிபதியின் வடக்கு வருகை தொடர்பில் எழுப்பப்பட்ட வினாவுக்கு அவர் பதிலளிக்கையில்,

ஏற்கனவே, வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கிய வேலைத்திட்டங்களையே திறந்து வைக்கின்றார். ஆனால், தமிழ் மக்கள் அவரிடம் எதிர்பார்ப்பது அரசியல் தீர்வு. தேர்தலை வருகின்ற நிலையில் வாக்கை பெறும் நோக்கிலும் வருகை தந்துள்ளார் - என்றார். (ஐ)

# மன்னாரில் நேற்று ஒதுங்கியது படகு!


மன்னார், மே 27

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள சௌத்பார் கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆட்கள் இல்லாத நிலையில் மீன்பிடி படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இந்தப் படகில் வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில், படகினுள் மீன்பிடி வலைகள் மற்றும் மீன்களும் காணப்பட்டன.

சௌத்பார் கடற்படையினர் குறித்த படகை மீட்டுள்ளதோடு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் படகு தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் படகா? அல்லது வேறு மாவட்டங்களில் இருந்து காற்றுக்கு அடித்து வரப்பட்டதா? என்பது குறித்து கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யானைகளை மோதி தடம்புரண்டது ரயில்!

### தாய் யானை பலி; குட்டி காயம்

வவுனியா, மே 27

யானைகளை மோதியதில் ரயில் தடம்புரண்டது. இதில், தாய் யானை உயிரிழந்த நிலையில் குட்டி யானை காயங்களுடன் உயிர் தப்பியது.

நேற்று முன்தினம் மாலை வவுனியா - கனகராயன் குளத்தில் காட்டுப் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற ரயிலே யானைகளை மோதித் தள்ளியது.

காயமடைந்த குட்டி யானையை பொதுமக்களின் உதவியுடன் மீட்ட வனஜீவராசிகள் திணைக்களம் அதற்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த விபத்தால் ரயில் சேவைகள் 4 மணி நேரம் தாமதமானது. (ஐ)

# மரம் வீட்டின்மீது வீழ்ந்ததில் பெண் பலி; இருவர் காயம்!

கொழும்பு, மே 27

கடும் காற்றால் மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

பதுளை - அப்புத்தளை - பங்கெடிய மருத்துவமனை அருகே உள்ள வீட்டிலேயே நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் 65 வயது பெண்ணே உயிரிழந்தார். 80 வயது ஆணும் 73 வயது பெணணும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மரப்பாலத்திலிருந்து தடுக்கி விழுந்து மூதாட்டி உயிரிழப்பு

கொழும்பு, மே 27

நீண்டகாலமாக உடைந்த நிலையில் காணப்பட்ட மரப் பாலத்தில் தடுக்கி நீரோடையில் விழுந்து மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

நுவரெலியா, புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குபட்ட ஜீ.கே. பிரிவு தோட்டத்தில் உள்ள பாலம் சில வருடங்களுக்கு முன்னரே உடைந்திருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் அந்தப் பாலத்தைக் கடந்த மூதாட்டி ஒருவர் தடுக்கி நீரோடையில் விழுந்து மரணமானார். அதே இடத்தைச் சேர்ந்த மலையாண்டி காளியம்மா (வயது 78) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ)

# 13ஆவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்!

### கரு ஜெயசூரிய வலியுறுத்து



கொழும்பு, மே 27

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதோடு சர்ச்சைக்குரிய காணி பிரச்னையை உத்தேச காணி ஆணைக்குழு ஊடாக தாமதமின்றி தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக இன மற்றும் மத அவநம்பிக்கையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்தி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் ஆரம்பத்திலிருந்தே மறைந்த மாதுலுவாவே சோபித்த தேரரின் செயல்பாடுகளான தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்துக்காக செயல்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், அந்த பயணத்தில் ஒரு தேசமாக, இலக்குகளை அடைவதற்கு நாம் இதுவரை தவறிவிட்டோம். இதுவே தற்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு காரணமாகியுள்ளது.

வரலாற்றை பார்க்கையில், *1948*இல் பிரித்தானிய பேரரசில் இருந்து எமது நாடு சுதந்திரம் அடைந்தமைக்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் உட்பட அனைத்து இனத் தலைவர்களின் கூட்டு முயற்சியே காரணமாக இருந்தது. அவர்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியே நாட்டின் சுதந்திரம் என்பதை நினைவுகூருகின்றோம். துரதிர்ஷ்டவசமாக, பிளவுபடுத்தும் இன, மத போக்குகள் உட்பட அடுத்தடுத்த நிகழ்ந்தேறிய விடயங்கள் இந்த ஒற்றுமையை சிதைத்துவிட்டன.

தற்போதைய நிலைமையில் நாட்டின் அனைத்து நிலைமைகளும் எதிர்கால சந்ததியினர் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். எனவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும் சர்ச்சைக்குரிய காணி பிரச்னையை உத்தேச காணி ஆணைக்குழுவின் ஊடாக தாமதமின்றி தீர்க்கவும் அக்கறையுடன் பரிசீலிக்குமாறு அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும், பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பாக வடக்கில் உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படையான மற்றும் நேர்மையான கலந்துரையாடல்களை தாமதமின்றி முன்னெடுக்குமாறும் நாங்கள் பரிந்துரைக்கிறோம். சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தேசத்தின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவது மிகவும் முக்கியமானதாகும்.

உலகத் தமிழர் பேரவையின் ஊடாக மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடையே மேம்படுத்தப்பட்ட உறவுகளையும் நேர்மறையான முன்னேற்றங்களை நாங்கள் ஏற்றுக்கொண்டு பாராட்டுகிறோம். தேசிய ரீதியாக கூட்டாக நாம் அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்புக்களுடனும் முன்னெடுக்கும் செயல்பாடுகள் பிரகாசமான எதிர்காலத்துக்கான நம்பிக்கையை அளிக்கின்றன.

அடுத்த தேர்தலை நாம் நெருங்கும்போது, அனைத்து பங்குதாரர்களும் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு உணர்வோடு ஒன்றுசேருமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த ஒன்றிணைவானது முக்கியமான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு வளமான இலங்கையை பரிசாக வழங்க முடியும் - என்றுள்ளது. (ஐ)

# ஹெரோயின் விற்ற மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் உட்பட 5 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 27

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டோரைக் கைது செய்த பொலிஸார் மதுவரி திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் தனியார் வங்கி ஒன்றின் உதவி முகாமையாளர் உட்பட ஐவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரொருவர் அலவத்துகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரில் ஒருவர் கொழும்பு மதுவரி திணைக்களத்தின்தலைமை பணிமனையில் பணியாற்றுபவர் கைதானார். இவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள், ஐஸ், கஞ்சா, டிஜிற்றல் தராசு மற்றும் 10 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# சட்ட மா அதிபரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதி பரிந்துரை!

### பிரதம நீதியரசராக நியமிக்கவும் திட்டம்

கொழும்பு, மே 27

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இதன்படி, ஆறு மாத சேவை நீட்டிப்பு வழங்குவதற்கான பரிந்துரை ஏற்கனவே அரசமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜூன் முதல் வாரத்தில் பாராளுமன்றம் கூடும் போது இந்தக் கோரிக்கையை அரசமைப்பு பேரவை



பரிசீலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், பதவி நீடிப்பு செய்யப்படவில்லை என்றால் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஜூன் 26 திகதியுடன் ஓய்வு பெறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய எதிர்வரும் டிசம்பர் மாதம் ஓய்வுபெறவுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக சஞ்சய் ராஜரத்தினத்தை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

ஆகையால், சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை ஆறு மாதங்கள் நீட்டித்து, பின்னர் அவரை பிரதம நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பதுளையில் கடும் காற்று; 114 வீடுகள் சேதமடைந்தன

### ஒருவர் உயிரிழப்பு; இருவர் காயம்

கொழும்பு, மே 27

கடும் காற்றால் பதுளை மாவட்டத்தில் 114 வீடுகள் சேதமடைந்தன. ஒருவர் உயிரிழந்தார், இருவர் காயமடைந்தனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவிக்கிறது.

அதன்படி, பதுளை மாவட்டத்துக்கு உட்பட்ட 15 பிரதேச செயலர் பிரிவுகளில் ஏற்பட்ட சேதங்களின் விபரங்கள் பின்வருமாறு,

அப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் ஒருவர் உயிரிழந்தார். 2 பேர் காயமடைந்தனர்.

பதுளை 3, ஹாலிஎல 3, எல்ல 1, பண்டாரவளை 22, ஹப்புத்தளை 20, அல்துமுல்ல 23, வெலிமடை 13, ஊவா பரணகம 18, சொரணதொட்ட 2, கந்தகெட்டிய 1, மீகஹகிவுல 3, ரிதிமாலியத்த 1, மகியங்கனை 1, பசறை 1 மற்றும் லுணுகலை 2 ஆகிய பகுதிகளில் வீடுகள் சேதமடைந்தன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு தராவிடின் போராட்டம் நடத்துவோம்!

## வடக்கு பட்டதாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், மே 27

**வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச வேலைகளை விரைந்து தர நடவடிக்கை எடுக்கப்படா விடின், வடக்கின் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் ஒன்றிணைத்து மிகப்பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று வட மாகாண பட்டதாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் ஊடக பேச்சாளர் கிருஷ்ணராஜா டனிசன் மேலும் தெரித்தவை வருமாறு, நாங்கள் பட்டப்படிப்பை முடித்து 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும், எமக்கான வேலை வாய்ப்புக்கள் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. இது தொடர்பில் எமது கருத்துகளை பாராளுமன்றில் பேச வேண்டும் என வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது, அவரை நேரில் சந்திக்க முயற்சித்தோம். ஆனால் வாய்ப்புக் கிட்டவில்லை. எமக்கு ஏதாவது ஒரு பொறிமுறையை ஏற்படுத்தி வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும். அது எமது கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்பாக இருக்க வேண்டும்.

தமிழ் பாட, அரசறிவியல் பாட பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணியை வழங்குவதால் பயனில்லை. அவர்கள் பெற்ற பட்டத்துக்கு ஏற்ப அவர்களுக்கான வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் - என்றார். (ஐ)

# ஐஸ் போதை கடத்தியவர் கான்ஸ்டபிளை தாக்கினார்!

கொழும்பு, மே 27

ஐஸ் போதைப்பொருளை கடத்திய முன்னாள் சிப்பாயை கைது செய்தபோது பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - நன்னேரிய பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் ஐஸ் போதைப்பொருளை கடத்திய முன்னாள் சிப்பாய் ஒருவரை பிடிக்க முயன்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, மே 27

3.6 கிராம் ஐஸ் போதைப் பொருள், 200 போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒவருரை பொலிஸ் கைது செய்யப் பட்டனர்.

மகியங்கனை - தொடம்வத்தை பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் பாடசாலை ஒன்றுக்கு அருகாமையில் போதைப்பொருட்களை விற்பனை செய்த நிலையில் அவரைப் பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# மதுபானத்தில் விஷம் கலந்து கணவனை கொன்றவர் கைது

கொழும்பு, மே 27

மதுபானத்தில் விஷம் கலந்து கொடுத்து கணவனை கொன்றவரை பொலிஸார் குது செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை - பெலியத்தை பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது கணவர் அருந்தும் மதுபானத்தில் விஷத்தை கலந்து கொடுத்து தானே அவரை கொன்றதாக மனைவி வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்தக் கொலைக்கு உதவினார் என்று கூறப்படும் பெண்ணின் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# 50 கோடி ரூபாய் பெறுமதியான அம்பர்கிறீஸுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே 27

30 கிலோ அம்பர்கிறீஸ் எனப்படும் திமிங்கல வாந்தியுடன் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை - பேருவளையில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

பேருவளை கரையோர புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

கைதானவர் 43 வயது நபராவார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட திமிங்கல அம்பர்கிறிஸின் பெறுமதி சுமார் ஐம்பது கோடி ரூபாய் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# இலஞ்சம் வாங்கிய காதி நீதிவான் கைது!

கண்டி, மே 27

விவாகரத்து வழங்குவதற்காக பெண்ணொருவரிடம் 4 ஆயிரத்து 500 ரூபாய் இலஞ்சம் வாங்கிய காதி நீதிவான் ஒருவர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த காதி நீதிவான் கைது செய்யப் பட்டுள்ளார்.

கண்டி - உடதலவின்ன காதி நீதிமன்றின் நீதிவானே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

# சீரற்ற காலநிலையால் 162 பேர் இடம்பெயர்வு!

நுவரெலியா, மே 27

நாட்டில் இடம்பெற்று வரும் சீரற்ற காலநிலையால் நுவரெலியா - மஹாவலி குடியிருப்பில் வசிக்கும் 58 குடும்பங்களை சேர்ந்த 162 பேர் கடந்த வியாழக்கிழமை முதல் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த குடியிருப்புக்கு அருகில் மரங்கள் சரிந்து விழும் அபாயமுள்ள வீடுகளில் இருந்த 11 குடும்பங்களை சேர்ந்த 45 பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, 47 குடும்பங்களை சேர்ந்த 117 பேர் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, மூன்று வீடுகளின்மீது மரங்கள் முறிந்து விழுந்தன. ஒருவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் வடக்கில் ஆரம்பிக்கத் திட்டம்!

கொழும்பு, மே 27

நாட்டின் பல மாகாணங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் அஸ்வெசும பயன் திட்டத்தில் இணைந்து கொள்ளாத நிலையில் அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை வட மாகாணத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வட மாகாண கிராம உத்தியோகத்தர்கள் தொழில் புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அவர்கள் நலன்புரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உறுதுணையாக இருந்தமையால் வடக்கில் இரண்டாம் கட்ட நிவாரண பணிகளை ஆரம்பிக்க நிதிய மைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் அனுப்பியவர்களின் தகவல்களை சரி பார்ப்பது போன்ற நடவடிக்கைகளில் இருந்து கிராம உத்தியோகத்தர்கள் ஒதுங்கி உள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை அஸ்வெசும அரசின் மானிய திட்டத்தில் சேர மாட்டோம் என கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ், முஸ்லிம் வாக்குகள் சஜித்துக்கே திரும்புகின்றன

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, மே 27

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் விரைவாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கே திரும்பி வருகின்றன என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் அதிகளவிலான மக்கள் பலம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு காணப்படுகின்றது. இதில் மாகாண மட்டத்தில் மொட்டுக் கட்சி, தேசிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் கூறினார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை குறைவடைந்த நிலையில் ஒரே ஒரு தீர்வு தேசிய மக்கள் சக்தி மாத்திரமே என்ற எண்ணத்தில் இருந்த பலரும் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். ஆரம்பத்தில் தேசிய மக்கள் சக்திக்கு படையெடுத்து வந்த கூட்டம் தற்போது மீண்டும் மொட்டுக் கட்சிக்கும் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலும் இணைந்துள்ளனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி கடந்த தேர்தலில் பெற்றுக்கொண்ட 4 இலட்சம் வாக்குகளை 50 வீதமாக அதிகரிக்கக் குறைந்தது 70 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு வாக்கு வீதத்தை அவர்களால் பெற்றுக்கொள்வது சாத்திய மற்றது என்பதால், தேசிய மக்கள் சக்தியால் ஒருபோதும் அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ், முஸ்லிம் வாக்குகள் வெகு விரைவாக ஐக்கிய மக்கள் சக்தியிடம் திரும்பி வருகின்றன. இதனடிப்படையில் அனைத்து வாக்குகள் மூலமும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அதிகளவு வாக்கு வீதத்தை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

பொது மக்களின் பிரச்னைகளுக்கு குரல் கொடுத்து முன்நிற்கும் காரணத்தால் கிராமப்புற மக்கள் சஜித் பிரேமதாஸ மீது அசையாத நம்பிக்கை வைத்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி அல்லாதவர்களை கட்சியில் இணைத்துக் கொள்வதற்காக எதிர்வரும் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் புதிய பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இதன் மூலம் மேலும் 20 இலட்சம் வாக்குகளை ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்க்கும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 27

விகாரையில் அமைக்கப்பட்ட வெசாக் அலங்கார வளையத்துக்கு மின்சார வசதியை ஏற்படுத்த முயன்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

அநுராதபுரம் - ஹெப்பிட்டிக்கொலாவையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 50 வயது நபரே உயிரிழந்தவராவார்.

மின்சாரத்தால் தாக்குண்ட நபரை உடனடியாக மருத்துவ மனையில் சேர்ப்பித்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் ஹெப்பிட்டிக்கொலாவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகிறது

## சாதுரியமாக செயல்படுங்கள் என்கிறார் நாமல்



மட்டக்களப்பு, மே 27

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்கின்றனர். எனவே தமிழ் மக்கள் மிகவும் புத்திசாலித் தனமாக தீர்மானம் எடுக்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.**

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தமிழ் மக்கள் மிகவும் புத்திசாலித்தனமாக தீர்மானம் எடுக்கவேண்டும், ஏனென்றால் ஒவ்வொரு முறையும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடிக்கின்றனர்.

அரசியல் கட்சிகள் பொது மக்களின் வாக்குகளை தமது தேவைக்கு பயன்படுத்துகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து மக்களும் விரும்பும் ஒருவரையே வேட்பாளராக நிறுத்துவோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் பெரும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும், ஆட்சி மாற்றத்தால் ஏனைய சில அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்க முடியாமல் போனது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது இலங்கை முழுவதும் அந்த அபிவிருத்தி முடக்கப்பட்டதுடன் அந்த ஆட்சி காலத்தில்தான் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

இதற்கான அவப்பெயர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. கேட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் அந்த சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

எங்களின் ஆட்சி இடைநடுவில் மாற்றப்பட்டதுடன், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்திருந்தோம். எவ்வாறாயினும், தேர்தல் நெருங்கும்போது கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்" - என்றார். (ஐ)



# 7 அடி உயர சிவன் சிலையுடன் மேற்தளம் அமைக்க அடிக்கல்

காரைதீவு, மே 27

ஏழு அடி உயர சிவன் சிலையுடன்கூடிய மேற்தளத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா நிந்தவூர் - மடத்தடி மீனாட்சி அம்மன் - சிவன் ஆலயத்தில் நடைபெற்றது.

சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நிர்மாணப் பணியை அட்டப்பள்ளத்தை சேர்ந்த விவேகானந்தம் கமலாதேவி தம்பதியர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில், சிவனாலய பூசகர் கே. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தூர்ந்து கிடந்த மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழமை வாய்ந்த சிவன் ஆலயத்தில் ஏலவே அழகிய சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த சிவலிங்கத்துக்கு மேற்தளம் அமைக்கவே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# சந்நிதி - கதிர்காமம் யாத்திரை குழு கிழக்கு மாகாணத்தை வந்தடைந்தது

திருகோணமலை, மே 27

செல்வச்சந்நிதி - கதிர்காமம் யாத்திரிகர்கள் குழு நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்தை அடைந்தது.

யாத்திரிகர்கள் குழு நேற்று முன்தினம் மாலை வடக்கு மாகாணத்தின் கொக்கிளாயில் இருந்து கடல்நீரேரியை படகு மூலமாக கடந்து திருகோணமலையை அடைந்தனர். இவர்கள் 8 படகுகள் மூலம் கரையைக் கடந்தனர். பின்னர் அங்கிருந்து புல்மோட்டையை சென்றடைந்தனர்.

இலங்கையின் மிக நீண்ட தல யாத்திரையான செல்வச் சந்நிதி தொடக்கம் கதிர்காமம் வரையான தல யாத்திரை பல வருடங்களாக நடைபெறுகிறது. இந்த ஆண்டுக்கான யாத்திரை கடந்த 11ஆம் திகதி சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. இது தற்போது கிழக்கு மாகாணத்தை சென்றடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# முத்துநகர் மக்களுடன் இம்ரான் எம். பி. சந்திப்பு

திருகோணமலை, மே 27

முத்துநகரிலிருந்து மக்களை வெளியேறுமாறு துறைமுக அபிவிருத்தி சபை உத்தரவிட்டமை தொடர்பில் இம்ரான் மஹரூப் எம். பி. கவனம் செலுத்தியுள்ளார்.

திருகோணமலை முத்து நகரில் பல தசாப்த ஆண்டுகளாக மக்கள் குடியிருக்கின்றனர். இந்தப் பகுதியிலிருந்து மக்களை வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மக்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் எம். பி. அந்த நகருக்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினார்.

வெளியேறப் பணிக்கப்பட்ட காணிகளில் மக்கள் விவசாய செய்கையை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், 1984 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானவை என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனாலேயே பிரச்னை ஏற்பட்டுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை காணும் நோக்கில் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்படும் என்று இம்ரான் எம். பி. தெரிவித்தார். (ஐ)






# காத்தான்குடியின் பாயிஸ் வேகநடையில் இரண்டாமிடம்!

கொழும்பு, மே 27

5 ஆயிரம் மீற்றர் வேகநடை போட்டியில் காத்தான்குடியை சேர்ந்த முஹமட் பாயிஸ் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

10ஆவது மாஸ்டர் மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டி கொழும்பு சுகதாச விளையாட்டு மைதானத்தில்அண்மையில் நடைபெற்றது.

இதில், காத்தான்குடியை சேர்ந்த முஹமட் பாயிஸ் 5000 மீற்றர் வேக நடைப் போட்டியில் 42.40:4 நிமிடங்களில் கடந்து வெள்ளிப்பதக்கம் வென்றார். (ஐ)

# "டெங்கு பரவல் தொடர்பில் அவதானமாக செயல்படுக"

சாய்ந்தமருது, மே 27

தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் சாய்ந்தமருது பிரதேசங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவக்கூடிய அபாயகரமான நிலைமை காணப்படுகிறது. எனவே, பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி எம். ஜே. கே. எம். அர்சத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.


மழை நீர் தேங்கி நின்று நுளம்புகள் அதிகமாகி டெங்கு நோயை பரப்பி வருகிறது. தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் டெங்கு பரவலை கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர். பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் ஒரு 15 நிமிடங்களை ஒதுக்கி, நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்.

நுளம்புக் கடியிலிருந்து உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாத்திடுங்கள். இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அல்லது காய்ச்சல் குறைந்தும் உடலில் ஏதும் மாற்றங்கள் இருந்தாலும் இரத்தப் பரிசோதனைக்காக மருத்துவ ஆலோசனையை பெறுங்கள்.

போதிய நீராகாரம் மற்றும் ஓய்வை உறுதி செய்யுங்கள். டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகருக்கு சுயமாகவே முன்சென்று ஒத்துழைப்பு வழங்குங்கள் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத் கேளிக்கை அரங்கில் தீ விபத்து; 33பேர் உயிரிழப்பு!



குஜராத், மே 27
கேளிக்கை விளையாட்டரங்கில் இடம்பெற்ற தீ விபத்தில் 33 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரில் அமைந்துள்ள மிகப்பெரிய கேளிக்கை விளையாட்டு அரங்கிலேயே நேற்று முன் தினம் இரவு இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தால், தீப்பிழம்புகளுடன் வானுயரத்துக்கு கரும் புகை மண்டலம் எழுந்தது. தீ விபத்தை தொடர்ந்து விளையாட்டு அரங்கத்துக்குள் இருந்த சிறுவர்கள், பெண்கள் உள்பட அனைவரும் தப்பியோடினர். ஆனால், வேகமாகப் பரவிய தீயால் ஏராளமானவர்கள் தப்பியோட வழியின்றி தடுமாறினர்.

தீயின் கடும் வெப்ப அலையால் தீயை உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீ விபத்தில் 33 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

## மருத்துவமனையில் தீ; 7 குழந்தைகள் கருகி பலி!

புதுடில்லி, மே 27
புதுடில்லியில் விவேக் விஹார் பகுதியில் உள்ள தனியார் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 குழந்தைகள் உயிரிழந்தன. மேலும், 5 குழந்தைகள் மீட்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தின்போது, ஒட்சிசன் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியமையால் தீயின் பரவல் அதிகரித்தது. நேற்று காலையிலேயே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மருத்துவமனை உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப் படுவதாக புதுடில்லி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## பணயக் கைதிகளின் மூன்று உடல்கள் மீட்பு

ஜெருசலேம், மே 27
ஹமாஸ் அமைப்பால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட மூவரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டனர். 254 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து இஸ்ரேல் காசா மீது போர் தொடுத்தது. 7 மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் போரில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 80 ஆயிதத்துக்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து 100 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இவர்களுக்கு பதிலாக இஸ்ரேலும் பலஸ்தீன கைதிகளை விடுவித்தது.

இந்நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இந்த நிலையில், 3 பணயக் கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனை இஸ்ரேல் அரசாங்கம் உறுதி செய்துள்ளது. (ஐ)



## இரண்டு வாரங்களில் 3 முறை எவரெஸ்டில் ஏறி பெண் சாதனை!

காத்மண்டு, மே 27
உலகின் மிக உயரமான சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை இரண்டே வாரத்தில் மூன்று முறை ஏறிய நபர் என்ற சாதனையை நேபாள மலையேறுபவரும் புகைப்படப் பத்திரிக்கையாளருமான பூர்ணிமா ஷ்ரேஸ்தா படைத்துள்ளார்.

பூர்ணிமா முதலில் மே 12 அன்று எவரெஸ்ட் சிகரத்தின் 8848.86 மீற்றர் உச்சத்தை அடைந்தார். மீண்டும் அவர் மே 19 அன்று பசாங் ஷெர்பாவுடன் இணைந்து உச்சியை அடைந்தார். அடுத்ததாக நேற்றுமுன்தினம் காலை 5:50 மணிக்கு மூன்றாவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார்.

பூர்ணிமா எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவது இது நான்காவது முறையாகும். 2018 ஆம் ஆண்டு முதல் முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் அவர் ஏறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

பப்புவா நியூகினியா நிலச்சரிவு

## உயிரிழந்தோர் தொகை 670ஆக அதிகரிப்பு

போர்ட் மோர்ஸ்பி, மே 27
பப்புவா நியூகினியாவில் ஏற்பட்ட நிலச்சரிவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 670ஆக அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அங்கு மண்சரிவு ஏற்பட்டது. இதில் பல வீடுகள் சேதமடைந்தன.


முதல் கட்ட தகவலின் அடிப்படையில் 100 பேர் வரை உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த மண் சரிவால் 670இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், 1,182 வீடுகள் சேதமடைந்தன.

நிலச்சரிவில் சிக்கி மேலும் பலர் மாயமாகி இருப்பதால் அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (ஐ)



## 'பயோனிக்' கை பொருத்தியதால் அயர்ன்மானாக மாறிய சிறுவன்!



நியூயோர்க், மே 27
அமெரிக்காவில் இடது கை இல்லாமல் பிறந்த ஜோர்தான் என்ற 5 வயது சிறுவனுக்கு "பயோனிக்" கை பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மிக இளம் வயதில் "பயோனிக்" கை பொருத்தப்பட்டவர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

சிறுவன் ஜோர்தானின் விருப்பத்தின்படி "அயர்ன் மான்" படத்தில் வரும் சிவப்பு மற்றும் தங்க நிறத்தில் வடிவமைக்கப்பட்ட பயோனிக் கை அவருக்கு பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சுப்பர் ஹீரோ அந்தஸ்தையும் அவர் பெற்றுள்ளார்.

இந்த பயோனிக் கை ஒரு முறை சார்ஜ் செய்வதால் 14 மணி நேரம் இயங்க வல்லது.

சிறுவன் ஜோர்தானுக்கு முன்பே கடந்தாண்டு, இங்கிலாந்தை சேர்ந்த 10 வயது ஹரி ஜோன்ஸ் என்ற சிறுவனுக்கு "அயர்ன் மான்" பயோனிக் கை பொருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)


## தண்ணீரால் பரவும் நோயால் பிரேசிலில் நால்வர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 27
பிரேசிலில் அண்மையில் மிகப்பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு 54 பேருக்கு தண்ணீரால் பரவும் லெப்டோஸ்பிரோசிஸ் நோய் இருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்ட நால்வர் உயிரிழந்தனர்.

எலிகள் மற்றும் விலங்குகளின் சிறுநீர், அழுக்கான தண்ணீர் மூலமாக இந்த நோய் பரவுகின்றது. இதே நேரம் 800இற்கும் மேற்பட்ட வர்களுக்கு லெப்டோஸ் பிரோசிஸ் நோய் பரவியி ருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

பிரேசில் அரசாங்கம் காலநிலை பேரழிவு என்று கூறப்பட்டுள்ள இந்த வெள்ளப்பெருக்கால் 23 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டனர். 5 இலட்சத்து 81 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர். 165இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். பலர் காணாமல் போயுள்ளனர்.

வெள்ளம் தற்போது வடிந்து வரும் நிலையில், பலர் லெப்டோஸ்பிரோசிஸ் நோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் காய்ச்சல், தசை வலி, குமட்டல் மற்றும் வாந்தி போன்ற நோய் அறிகுறிகளுக்கு உள்ளாவர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல், வடமேல் மாகாணங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

கொழும்பு, மே 27

**மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஏனைய மாகாணங்களை விட அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி வருகின்றன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பல சம்பவங்கள் இடம்பெற்றாலும் அவை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைப்பது குறைவடைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களை புறக்கணிப்பது தொடர்பில் இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதி வரையில் 872 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதிக்குள், சிறுவர்களை கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் 632 முறைப்பாடுகள் கிடைத்தன என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களை அடிமைகளாக பயன்படுத்தியமை தொடர்பில் 50 முறைப்பாடுகள், சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாத குற்றச்சாட்டு தொடர்பில் 499 முறைப்பாடுகள் இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காதல் விவகாரத்தால் மோதல் இளைஞர் குத்திப் படுகொலை!

கொழும்பு, மே 27

காதல் விவகாரம் தொடர்பில் ஏற்பட்ட தர்க்கத்தில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு - கிராண்ட்பாஸ் - பேஸ்லைன் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பேலியகொடையை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞராவார்.

வெசாக் வலயத்தை பார்ப்பதற்காக நண்பர்களுடன் இளைஞர் சென்றிருந்தார். அப்போது மற்றொரு குழுவினருடன் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தர்க்கத்துக்கு காதல் விவகாரமே காரணம் என்று கூறப்படுகின்றது.

இதன்போது அந்த இளைஞர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் வெல்லம்பிட்டியை சேர்ந்த 17 மற்றும் 18 வயதுடைய சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# சஜித் - பொன்சேகா சமரச முயற்சி தோல்வி

கொழும்பு, மே 27

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகாவுக்கும் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு முறிவடைந்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவிக்கு சரத் பொன்சேகா போட்டியிட வேட்புமனு கோரியது தொடர்பாகவே இவர்களுக்கு இடையில் பேச்சு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

சரத் பொன்சேகாவுடன் பேச்சு நடத்துவதற்கான அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அந்தக் கட்சி வழங்கியது.

அதன்படி, திஸ்ஸ அத்தநாயக்கவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. ஆனால், சரத் பொன்சேகா தனக்கு ஜனாதிபதி வேட்புமனுவைக் கோரியதால் பேச்சை தொடர முடியாத நிலை ஏற்பட்டதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# யானை தாக்கி முதியவர் பலி!

கொழும்பு, மே 27

காட்டு யானை தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் - கிராதுருக்கோட்டை- பேரியல் சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தை சேர்ந்த 82 வயது நபரே உயிரிழந்தார்.

முதியவர் நேற்று அதிகாலை வீட்டுக்கு வெளியே வந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்தது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தவர் ஜே.வி.பி அல்ல!

## அநுரகுமார திஸநாயக்க

மன்னார், மே 27

பொலநறுவையில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது ஜே. வி. பி உறுப்பினர் ஒருவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார் என்பதை தேசிய மக்கள் சக்தி மறுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார் என்று கூறப்படும் நபர் ஜே. வி. பி உறுப்பினர் அல்ல, சிறீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் என்று அநுர குமார திஸநாயக்கா தெரிவித்தார்.

மன்னாரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய திஸநாயக்க,

குறிப்பிட்ட நபர் பொலநறுவை மாநகர சபையின் பெண்டிவெவ பிரதேசத்தில் போட்டியிடுவதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுக்களை சமர்ப்பித்த ஹிகிஹாமிலகே சமன் குமார என்ற சிறீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இவர்கள் எப்படியாவது மக்களை ஏமாற்றவே முயற்சிக்கின்றனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சிறீ லங்கன் எயார்லைன்ஸ்க்கு 79.78 மில்லியன் ரூபாய் இலாபம்

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் 2023 ஆம் ஆண்டில் 79.78 மில்லியன் ரூபாய் இலாபத்தை பெற்றுள்ளதாக சிறீலங்கன் எயார் லைன்ஸ் அறிவித்துள்ளது.

ஆனால், 2021 ஆம் ஆண்டு சிறீ லங்கன் எயார்லைன்ஸ் 16 ஆயிரத்து 660 கோடி ரூபாயையும், 2022 ஆம் ஆண்டில் 7 ஆயிரத்து 400 கோடி ரூபாயையும் இழந்துள்ளது.

மிகப்பெரும் கடனில் உள்ள சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான விண்ணப்பங்களை அரசாங்கம் அண்மையில் கோரியது. அதற்கு 6 விண்ணப்பதாரர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சிறீ லங்கன் ஏர்லைன்ஸ் தற்போது 59 நாடுகளில் 113 நகரங்களுக்கு சேவைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# களனி, களு கங்கைகள் பெருக்கெடுக்கும் அபாயம்!

கொழும்பு, மே 27

நாட்டில் தற்போது அதிக மழை பெய்து வருவதால், களனி மற்றும் களு கங்கை போன்ற ஆறுகளில் மேல் பகுதிகளின் நீர்மட்டம் எச்சரிக்கை அளவை எட்டியுள்ளது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இவை பெருக்கெடுக்கும் அபாயம் உள்ளதாகவும் நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் பொறியியலாளர் எஸ். பி. சி. சுகீஸ்வர பண்டார தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கியவுடன் இந்த ஆறுகளின் நீர்மட்டம் முதன்முறையாக எச்சரிக்கை அளவை எட்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்துக்கு அண்மித்த களனி மற்றும் களு கங்கையின் மேல் பகுதிகளில் வசிப்பவர்கள் திடீர் வெள்ளம் குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சப்ரகமுவ மற்றும் மேல், தென், வடமேல் மாகாணங்களில் பெய்துவரும் கடும் மழையால் ஆறுகளில் நீரின் மட்டம் உயர்வாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பெறாமக்கள் துஷ்பிரயோகம் சிறியதந்தைகள் இருவர் கைது

கொழும்பு, மே 27

பெறாமக்களை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகலை, பதுளை மாவட்டங்களில் இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மொனராகலை - இத்தேகடுவ தெனகல்லந்த பிரதேசத்தை சேர்ந்த 8 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவரின் சித்தப்பாவை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

தனது தாத்தாவுடன் சிறுவன் வசித்து வந்துள்ளார். தாத்தா இல்லாத நிலையில் சிறுவனின் சித்தப்பா அவரை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரான சிறுவனின் சித்தப்பா கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பதுளை - வெல்லவாயவில் 13 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் அவரின் சிறியதந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய், தந்தை பிறிதோர் இடத்தில் வசிக்கின்றனர். இந்த நிலையில், சிறுமி தனது பாட்டியின் பராமரிப்பில் வசித்துள்ளார். இதன்போது, அவரின் சிறியதந்தை சிறுமியை பலமுறை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். சிறுமி இது தொடர்பில் தனது பாட்டிக்கு தெரிவித்ததையடுத்து அவர் அளித்த பொலிஸ் முறைப்பாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# 20 தான நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, மே 27

சுகாதார சிர்கேட்டுடன் இயங்கிய 20 வெசாக் தான நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் 20 ஆயிரம் வெசாக் தான பந்தல்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடத்தினர்.

கொழும்பில் நடத்தப்பட்ட 4 ஆயிரம் தான பந்தல்களில் நடத்தப்பட்ட சோதனையில் 5 நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், ஏனைய இடங்களில் சீர்கேட்டுடன் இயங்கிய 15 தான நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

# வான் மரத்துடன் மோதியதில் ஒருவர் மரணம் 13 பேர் காயம்!

கொழும்பு, மே 27

வீதியை விட்டு விலகிய வான் மரத்துடன் மோதுண்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 13 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

அநுராதபுரம் - பதெனிய வீதியில் கல்கமுவவில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


இதில், ஒருவர் உயிரிழந்தார். 7 பெண்கள் உட்பட 13 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கல்கமுவ மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்டனர்.

இதில், 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கல்கமுவ பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருது பிரதேசத்தில் இளைஞர் படையணி அமைப்பு



சாய்ந்தமருது, மே 27

சாய்ந்தமருது பிரதேசத்தில் அபிவிருத்தி, அரசியலில் பங்கேற்க இளைஞர் படையணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதின் எதிர்கால சமூக கலாசார, அரசியல், அபிவிருத்தி, இளைஞர்களின் நல நோன்புத் திட்டங்களை திட்டமிட்ட வகையில் நடைமுறைப் படுத்தவே இந்தப் படையணி அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசா ஹிப்பின் எண்ணக்கருவில் இந்த இளைஞர் படையணி உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தலில் போட்டியா, இல்லையா? ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, மே 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா மாட்டாரா என்பது தொடர்பில் இப்போதே தீர்மானம் ஒன்றை மேற்கொண்டால், ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் தமது கட்சிக்கும் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த ஆண்டில் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருந்தாலும் கூட, ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என இது வரையில் அறிவிக்கவில்லை. தற்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளாரென அறிவித்துள்ளார்.

ரணில் விக்கிரசிங்கவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தால் அமைச்சரவையிலிருந்து இரு வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் அது தொடர்பில் தமது கட்சி நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் ." என தெரிவித்தார்

இந்த ஆண்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருப்பதால் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி அது தொடர்பில் தயாராவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# ஐ. எஸ். அமைப்பினரை கண்டறிய விசேட குழு

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் நாட்டில் இருக்கிறார்களா என்பதை கண்டறிய விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தற்போது அவசர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கடுவலை பிரதேசத்தில் இடம்பெற்ற வெசாக் திருவிழாவில் நேற்று கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொலிஸ் மா அதிபர் இதனை தெரிவித்தார்.

அகமதாபாத் நகருக்கு இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தாக்குதல் நடத்த ஆயத்தங்களுடன் சென்ற ஐ. எஸ். அமைப்பினர் என்று கூறப்படும் நால்வர் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையிலேயே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# விகாரையை வழிபட்டு பிரித் ஓதுமாறு தமிழ் பொலிஸார்மீது கட்டாயப்படுத்தல்?

யாழ்ப்பாணம், மே 27

வெசாக் தினத்தில் மாவிட்டபுரம் கெமுனு விகாரைக்கு தமிழ் பொலிஸார் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டு வழிபட வைக்கப்பட்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளனர்.

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக மாவிட்டபுரம் இருந்தபோது எந்த அனுமதியும் பெறப்படாமல் இந்து ஆலய வளாகத்துக்குள் கெமுனு விகாரை கட்டப்பட்டது.

இந்த நிலையில், வெசாக் தினத்தன்று பிக்கு ஒருவர் அந்த விகாரைக்கு வருகை தந்தார். இதன்போது, தமிழ் பொலிஸார் கட்டாயமாக அங்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்று காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய உயர் அதிகாரிகள் கட்டளை இட்டனர்.

இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் தமிழில் பிரித் ஓத வைக்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## சிங்கள...

நினைக்கும் மனோநிலையிலி ருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத் துவம், சகோதரத் துவம் என்பவை சாத்தியமே இல்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

## வவுனியா...

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதே எனது நோக்கம். இதற்காக கடந்த இரு வருடங்களில் வடக்கில் 4 மருத்துவ பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## அடிப்பதா...

கலைக்கப்படும் என உதயங்க வெளியிட்ட தகவலைத் தொடர்ந்து பஸில் ராஜபக்ஷவை ஆளுங்கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று சந்தித்தனர்.

பாராளுமன்றத் தேர்தல் முன்னரே நடக்கும் என்றால் முற்கூட்டியே கூறுங்கள். தேர்தல் வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்கள் பஸிலிடம் கேட்டனர்.

அதற்கு அவர், "எனக்கு அது பற்றி தெரியாது, சிலவேளை ரணிலின் தகவலை உதயங்க வெளியிட்டிருக்கலாம். தற்போதைய சூழ்நிலையில் அரசியல் களத்தில் எவ்வாறு ஆட வேண்டும் என்பது பற்றி ரணிலுக்கு விளக்கிவிட்டேன். இனி முடிவெடுக்கும் அதிகாரம் அவரிடம்தான் உள்ளது."- என்று சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியை நேரில் சந்தித்து பலமுறை வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நீங்களே...

வித்தியாலயத்தில் நடந்த காணி உரித்து வழங்கும் நிகழ்வில் பங்கேற்றார்.

இங்கு உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம். பி. பேசுகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஜனாதிபதி வருகை தந்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மாவட்டத்தில் பல பிரச்னைகள் உள்ளன. அவற்றை உங்களால்தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது.

இந்த மாவட்ட அபிவிருத்தி குழுவை உங்கள் தலைமையில் நடத்தி முல்லைத் தீவு மாவட்ட மக்களின் காணி உள்ளிட்ட பிரச்னைக்குத் தீர்வு வழங்க வேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எமது மக்களின் அனைத்து பிரச்னைகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றேன் - என்றார். (ஐ)

## பிரான்ஸ்...

- இராஜகிரியவிலுள்ள இல்லத்தி லேயே அவரின் சடலம் மீட்கப்பட்டது. திடீர் சுகயீனம் காணரமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்று நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். (ஐ)

## மனித...

வெளியிட்டுள்ளமை தேவையற்ற ஒரு தலைப்பட்சமான முயற்சி.

இலங்கையின் நிலைப்பாட்டை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இது. இந்த அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனை வெளியிட்டமைக்கான நோக்கம் என்ன? - என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தருணத்தில் இந்த அறிக்கை பக்கச்சார்பாக - அரசியல் மயப்படுத்தப்பட்டதாக - சுயமாக உருவாக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஒக்ரோபர்...

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதி நடைபெறும். இந்தத் தேர்தலை யாராலும் தடுக்க முடியாது.

பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அது தொடர்பில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. என்றாலும் அவற்றுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

எமது நாட்டில் கிராம மட்டத்தில் வாழும் மக்கள் இனவாதம் மதவாதம் இல்லை. அவர்களுக்கு இன, மத ஐக்கியமே தேவையாகும். ஒரு சில அரசியல் வாதிகள் எமது மக்களை குழுக்களாக பிரித்தார்கள். அவ்வாறான நிலைமையை இல்லாதொழிக்க மக்கள் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## சம்பியன்...

தொடக்கம் கொடுத்தனர். இதில் நரைனை 6 ஓட்டங்களில் வெளியேற்றினார் கம்மின்ஸ்.

அதன் பின்னர் வெங்கடேஷ் ஐயர் மற்றும் குர்பாஸ் இணைந்து ஓட்டங்களை குவித்தனர். இதில் வெங்கடேஷ் ஐயர் அதிரடியாக ஆடி ஓட்டம் குவித்தார். அவர் 24 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இதன் பலனாக பவர்பிளே முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 72 ஓட்டங்கள் எடுத்தது கொல்கத்தா. குர்பாஸ் 39 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

10.3 ஓவர்கள் முடிவில் அந்த அணி இலக்கையும் எட்டி அசத்தியது. இதன் மூலம் அந்த அணி கோப்பை வென்றுள்ளது. ஐ. பி. எல். கிரிக்கெட்டில் மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இதற்கு முன்னர் 2012 மற்றும் 2014இல் அந்த அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

முதல் இன்னிங்ஸில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் அபிஷேக் சர்மா மற்றும் டிராவிஸ் ஹெட் சிறப்பான ஆட்டத்தை கொடுக்க தவறினர். அபிஷேக் 2 ஓட்டங்களில் வெளியேறினார்.

முதல் பந்திலேயே ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஹெட் வெளியேறினார். தொடர்ந்து ராகுல் திரிபாதியும் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பவர்பிளே முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 40 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது அந்த அணி.

நிதிஷ் ரெட்டி, மார்க்ரம், ஷாபாஸ் அகமது, அப்துல் சமாத், கிளாசன் ஆகியோரும் ஆட்டமிழந்தனர். முறையான இணைப்பாட்டம் அமைக்க முடியாமல் அந்த அணி தடுமாறியது. 18.3 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தொடரும் அனர்த்தத்தால் 45 ஆயிரம் பேர் பாதிப்பு!

## உயிரிழப்பு 8ஆக உயர்ந்தது

கொழும்பு, மே 27

நாடு முழுவதும் பெய்து வரும் கனமழையால் 12 ஆயிரத்து 207 குடும்பங்களை சேர்ந்த 45 ஆயிரத்து 509 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எண்மர் உயிரிழந்தனர். 32 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். 311 குடும்பங்களை சேர்ந்த 1,248 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அறிக்கையின்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் 436 குடும்பங்களைச் சேர்ந்த 959 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 517 குடும்பங்களைச் சேர்ந்த 1930 பேரும், கேகாலை மாவட்டத்தில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 163 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 638 குடும்பங்களைச் சேர்ந்த 2269 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 5790 குடும்பங்களில் 23,155 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 685 குடும்பங்களில் 2926 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 812 குடும்பங்களை சேர்ந்த 2652 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 368 குடும்பங்களைச் சேர்ந்த 1414 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 2434 குடும்பங்களைச் சேர்ந்த 8006 பேரும் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 47 குடும்பங்களில் 158 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 272 குடும்பங்களைச் சேர்ந்த 1249 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 386 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரும், பொலநறுவை மாவட்டத்தில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 27 குடும்பங்களை சேர்ந்த 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், திருகோணமலை மாவட்டத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போதான அனர்த்தங்களில் புத்தளம் மாவட்டத்தில் நான்கு பேரும் இரத்தினபுரி, காலி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் தலா ஒருவருமாக 8 பேர் உயிரிழந்தனர்.

## வெசாக் வலயம் பார்க்கச் சென்ற சிறைக் கைதி தப்பியோட்டம்!


கொழும்பு, மே 27

வெடிகும்புர பகுதியில் வெசாக் வலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறைக் கைதி ஒருவர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று மொனராகலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பியோடியவர் வெல்லவாய பகுதியைச் சேர்ந்தவர் என மொனராகலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பதுளை, எம்பிலிப்பிட்டி, வெல்லவாய மற்றும் சியம்பலாண்டுவ நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்டு மொனராகலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரே இவ்வாறு தப்பி ஓடியுள்ளார். (ஐ)

## கொழும்பு மாநகரில் 59 மரங்கள் வீழ்ந்தன



கொழும்பு, மே 27

பலத்த காற்றால் கடந்த 20ஆம் திகதி முதல் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் 59 மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்கள், வீதிகள் மற்றும் வீடுகளுக்கு அருகிலுள்ள மரங்களே இவ்வாறு முறிந்து விழுந்துள்ளன.

இதேவேளை கொழும்பில் வீசிய பலத்த காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் மூடப்பட்டிருந்த பல வீதிகள் நேற்று திறக்கப்பட்டுள்ளன.

சேர் லெஸ்டர்ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை சந்தியில் இருந்து ரொட்டுண்டா சுற்றுவட்டம் வரையான வீதியும், பொரளை கனத்த சுற்றுவட்டத்திலிருந்து தும்முல்லை சுற்றுவட்டம் வரையான வீதியும் நேற்றுமுன்தினம் இரவு மூடப்பட்டன.

இதேநேரம் மரங்களுக்குக் கீழாக வாகனங்களை நிறுத்தும் போது அவதானமாக இருக்குமாறு கொழும்பு மாநகர சபை சாரதிகளை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## ஆட்கடத்தல் குற்றவாளியான இலங்கையர் நாடு கடத்தல்!

### பிரிட்டன் திட்டம்

லண்டன், மே 27

பிரிட்டனுக்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகளை கடத்தும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு முன்னெடுத்த இலங்கையரை பிரான்ஸுக்கு நாடு கடத்த பிரிட்டன் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சதாசிவம் சிவகங்கன் என்பவரையே பிரான்ஸுக்கு நாடு கடத்த பிரிட்டன் தீர்மானித்துள்ளது. பிரான்ஸ் நீதிமன்றம் கடந்த வருடம் ஆட்கடத்தலில் ஈடுபட்டார் என தீர்ப்பு வழங்கியதுடன் ஐந்து வருட சிறைத் தண்டனையை விதித்திருந்தது.

இலங்கையிலிருந்து 2003 இல் பிரிட்டனுக்கு தப்பிச் சென்ற அகதியான இவருக்கு அங்கு வாழ்வதற்கான சகல அனுமதிகளையும் பிரிட்டன் வழங்கியிருந்தது.

சிவகங்கனின் மனைவியும் பிள்ளைகளும் பிரிட்டிஷ் பிரஜைகள் ஆவர்.

இதேவேளை கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையை சேர்ந்தவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்திய கும்பலின் தலைவராகவும் இவர் செயல்பட்டுள்ளார்.

ஆட்கடத்தலில் ஈடுபட்டனரென 14 பேருக்கு எதிராக பிரான்ஸ் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. அதில் சிவகங்கன் பிரதான குற்றவாளியாவார். (ஐ)

## மின் தடை தொடர்பில் 61 ஆயிரம் முறைப்பாடு

கொழும்பு, மே 27

இலங்கை மின்சார சபை நேற்று பிற்பகல் 2 மணி வரை 61 ஆயிரத்துக்கும் அதிகமான மின் தடை முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

மே 21 -26ஆம் திகதிக்கு இடைப்பட்ட இடைப்பட்ட காலப்பகுதியில் கடந்த ஆறு நாட்களில் 4 இலட்சத்து 67 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட நுகர்வோருக்கு மின்சாரம் தடைப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகள் அளிக்கப்பட்டன.

இதன்படி, நேற்று பிற்பகல் 2 மணிக்குள் 26, 700 மின் தடைகள் சீர்செய்யப்பட்டு 4 இலட்சத்து 25 ஆயிரத்து 500 பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட அனைத்து நுகர்வோருக்கும் மின்சாரத்தை மீளவழங்க இலங்கை மின்சார சபை நிர்வாகமும் சேவை ஊழியர்களும் 24 மணி நேரமும் உழைத்து வருகின்றனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.4 கோடி செலவில் புனரமைப்பு

### அமைச்சர் ஜீவன் பணிப்பு



நுவரெலியா, மே 27

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பெருந்தோட்ட மக்களுக்கு 40 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை

நுவரெலியாவின் போகாவத்தை, அக்கரபத்தனை, போடைஸ், சாஞ்சிமலை மற்றும் பொகவந்தலாவை பகுதியில் டியன்சின், கெம்பியன் பெற்றோசோ ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களையே அவர் நேரில் சந்தித்தார்.

இதன்போது, பெருந்தோட்ட தொழிலாளர்களைச் சந்தித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் 1700ரூபாய் சம்பளம் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிறுவனத்துக்கு அவர் பணிப்புரை விடுத்தார். (ஐ)

## சுழிபுரத்தில் பனைத் திருவிழா!





யாழ்ப்பாணம், மே 27

சுழிபுரம் - திருவடிநிலையில் பனைத் திருவிழா நேற்று கொண்டாடப்பட்டது.

பனைசார் உணவு பொருட்கள் உற்பத்தி, பனைசார் உரையாடல், நாடகங்களும் நடத்தப்பட்டன.

இந்த பனைத் திருவிழாவில் அதிகளவான சுற்றுலாவிகள் கலந்து கொண்டனர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (ஐ)

## அமெரிக்க வர்த்தகரிடம் 14 இலட்சம் ரூபாய் களவு

கொழும்பு, மே 27

அமெரிக்க வர்த்தகர் ஒருவரின் 14 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உள்நாட்டு - வெளிநாட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

களுத்துறை, அளுத்கமவில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தவரிடமே இந்தப் பணம் திருடப்பட்டது. அத்துடன், அவரின் கடவுச்சீட்டும் திருடப்பட்டதாக களுத்துறை பொலிஸில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹோட்டல் அறையில் நித்திரையில் இருந்தபோது யன்னல் வழியாக நுழைந்தவர் 4 ஆயிரம் டொலர், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மற்றும் கடவுச்சீட்டை திருடிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

திருடிவிட்டு தப்பிச் சென்றபோது தான் நித்திரையிலிருந்து எழுந்து கூச்சலிட்டதாகவும் தனக்கு உதவி கிடைக்கும் முன்னர் திருடன் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டான் என்றும் தனது முறைப்பாட்டில் அமெரிக்கர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.